09.08.2024

கூடுதல் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.

அமர்வு வழக்கு எண். 24/2016

அ.சா.19

| | | | |
|---|---|---|---|
| பெயர் | அச்சுதன் | | |
| த/பெ | கோவிந்தன் | | |
| கிராமம் | விழுப்புரம் | தொழில் | |
| தாலுக்கா | விழுப்புரம் | வயது | 50/2024 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை**

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது விழுப்புரம் மேற்கு காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணி புரிந்து வருகிறேன். கடந்த 13.04.2011ம் வருடம் நான் கெடார் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியில் இருந்தபோது இந்த வழக்கில் இறந்து போன கூட்டேரிபட்டை சேர்ந்த சரவணன் த/பெ சண்முகம் என்பவரின் பிரேதத்தினை உடற்கூராய்வு செய்ய வேண்டி காவல் நிலைய ஆய்வாளர் வேண்டுகோளின் படி மருத்துவரை அணுகி பிரேதத்தை அடையாளம் காட்டி பிரேதத்தினை ஒப்புவித்தேன். பின்பு பிரேத உடற்கூராய்வு முடிந்த பிறகு பிரேதத்தை அவரது தந்தை சண்முகம் த/பெ செல்வராஜ் என்பவர் வசம் ஒப்புவித்தேன். பிரேதத்தின் மேல் இருந்து எடுக்கப்பட்ட உடைகளை காவல் நிலையம் சென்று ஆய்வாளரிடம் ஒப்புவித்தேன். ஆய்வாளர் படிவம் 91 மூலம் அவைகளை கைப்பற்றி கொண்டார்கள். அவைகளை நீதிமன்றத்தில் ஒப்படைக்க வேண்டியதின் பேரில் அதை நான் நீதிமன்றத்தில் ஒப்படைத்து அவர்களுடைய உத்தரவின் பேரில் விழுப்புரம் தடைய அறிவியல் ஆய்வகத்தில் ஆய்விற்காக ஒப்படைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**1ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

தடய அறிவியல் ஆய்வகத்தில் என்னென்ன பொருட்களை நான் கொடுத்தேன் என்று எனக்கு தற்போது ஞாபகமில்லை. உடல் உறுப்புகளை கொடுத்தால் பாட்டிலில்தான் கொடுப்பார்கள் என்றால் சரிதான். அதுபோன்று எதுவும் நான் கொடுக்கவில்லை. ஆய்வாளர் காவல் நிலையத்தில் வைத்துதான் அதே தேதியில் என்னை விசாரித்தார். லேபில் ஒப்படைத்தது குறித்து ஒரு முறை விசாரித்தார். ஆய்வாளர் என்னிடம் வேண்டுகோள் கடிதத்தை அப்போதே கொடுத்துவிட்டார். காலை 4.45 மணிக்கு பிரேதத்தை ஆம்புலன்ஸில் ஏற்றும் போதே கொடுத்தார். அந்த வேண்டுகோள் கடிதத்தை மருத்துவரிடம் எப்போது கொடுத்தேன் என்றால் நேரம் சரியாக ஞாபகமில்லை. அன்றே கொடுத்தேன். நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் வேண்டுகோள் கடிதத்தை மருத்துவரிடம் கொடுக்கவில்லை என்றும், இந்த வழக்கிற்காக பொய் கூறுகிறேன் என்றால் சரியல்ல. அதேபோல் ஆய்வாளரும் என்னிடம் காலை 4.45 மணிக்கு கடிதம் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

**3ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

பிரேதத்தை என்னிடம் கஞ்சனூர் வட்ட ஆய்வாளர் ஒப்படைத்தார். பிரேத அறிக்கைக்காக நான் நீதிமன்ற அனுமதி கடிதம் பெற்றேனா என்றால் இல்லை. தடய அறிவியல் ஆய்வகத்திற்கு ஒப்படைப்பதற்காக நீதிமன்றத்தில் இருந்து கடிதம் பெற்றேன். பிரேதத்தின் மீது இருந்த துணிகளை நான் லேபில் ஒப்படைத்தேன். என்னை எந்தெந்த தேதிகளில் விசாரித்தார்கள் என்று ஞாபகம் இல்லை. விசாரணை ஒரே முறைதான் நடந்தது. எனது சாட்சியம் ஏற்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

(2ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணையை 3ம் எதிரி தமதாக ஏற்றுக் கொண்டார்)

**மறுவிசாரணை**

இல்லை